


**27.08.2018**

## 8.‘துயரத்தில்’ கண்டடையும், ஆவிக்குரிய தொழுகை!

***ந***ம்முடைய வியாகுலமோ, துன்பமோ, பொருளாதார நெருக்கடியோ.... ஆகிய அனைத்து வாழ்வின் கடின சூழ்நிலை நேரங்களிலும் தேவனுடைய அன்பை சிறிதும் சந்தேகிக்காமல் **“தேவன் என்னை நேசிக்கிறார்!”** என அறிக்கை செய்பவர்கள் மாத்திரமே, சூழ்நிலைகளால் பாதிக்கப்படாதவர்கள்! அவைகளை ‘தெய்வ அன்பால்’ முற்றிலும் ஜெயமெடுத்தவர்கள்!! என ரோமர்.8:36,37 முத்திரை பதிக்கிறது!

எவ்வித துன்ப நிலையும் ‘தேவனுடைய அன்பை’ எங்களைவிட்டு பிரிக்க முடியாது! என்ற ஆழ்ந்த பக்தியே ‘மெய் ஆராதனை’ கொண்டவர்கள்! இவர்களே, **பிதாவை ‘எங்கும்’ உண்மையோடு,** ஆவியில் தொழுதுகொள்ளும் பாக்கியம் பெற்றவர்கள் (யோவான்.4:21,24).

**– ரத்னம்**